# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 6/2018. நாள்.01.04.2024**

**போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகேசன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | |

**வா.சா.1 ஆஜர். 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட கற்று ஒரு வருடம் ஆகிறது. வழக்கு தாக்கல் செய்யும்போது கையெழுத்து தான் போட்டேன். வழக்கு தாக்கல் செய்து சுமார் 5 ஆண்டுகள் ஆகிறது. வழக்குரையில் உள்ள கைரேகையானது என்னுடையது ஆகும். சர்வே எண்.1160/1 யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.1160/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் படிக்காத காரணத்தால் எனக்கு தெரியாது. கெம்பகவுண்டர் எனக்கு மாமா முறை ஆகும். எனது நிலத்திற்கு அருகில் அவர் நிலமும் உள்ளது. அவர் நிலத்திற்கு மேற்கே தங்கவேல் கவுண்டர் நிலம் உள்ளது. கெம்பகவுண்டருக்கு நிலத்திற்கு கிழக்கு புறம் எனது நிலம் உள்ளது.

எனது நிலத்திற்கும், தங்கவேல் நிலத்திற்கும் இடையே வழி செல்லவில்லை. எனது நிலத்திற்கு மேற்குபுறம் எந்த வழியும் இல்லை. தங்கவேல் நிலத்திற்கு செல்ல அவர் நிலத்திற்கு மேற்கு புறம் சாலை செல்கிறது. எனது நிலத்திற்கு வடக்குபுறம் தேக்ககவுண்டர் நிலம் உள்ளது. தேக்ககவுண்டர் நிலத்திற்கு மேற்குபுறம் வழி இல்லை. தேக்ககவுண்டரின் நிலத்திற்கு கிழக்கு புறம் வழி செல்கிறது. கெம்பகவுண்டரிடம் நான் நிலத்தை வாங்கியதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது வழக்குரையில் தாவா ஆ அட்டவணை சொத்திற்கு 3 1/2 அடி அகலத்தில் 25 அடி நீளத்தில் செல்லும் வழி பாதை வழியாகத்தான் நானும், கெம்பகவுண்டரும், நீண்ட காலமாக சென்று வந்து அனுபவித்து வருகிறோம் என்று சொல்லியுள்ள நிலையில் மேற்படி பாதைக்கு ஜெக்குபந்தி தெரியாது. அந்த பாதை அமைந்துள்ள சர்வேஎண்

தெரியாது. சிமெண்ட் ரோடு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்கிறது. மேற்படி சொத்துக்கு செல்வதற்கு வேறு வழிப்பாதை உண்டு என்று சொன்னால் சரியல்ல. வழிப்பாதை குறித்து நானும், மற்ற ஊரில் உள்ள நபர்களும் பயன்படுத்துவதாக கூறியுள்ள நிலையில் வேறு நபர்கள் மேற்படி வழிப்பாதை உரிமை குறித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி செல்வம் என் மீது இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வழிப்பாதை இல்லை என்று சொல்லி எனக்கு தடங்கல் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

18.10.2017 ம் தேதி ஆ அட்டவணை சொத்தில் செல்லும் வழிப்பாதையை பிரதிவாதி தடுத்த வகையில் 1ம் பிரதிவாதியின் சட்டவிரோத செயலுக்கு எதிராக மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது வழிப்பாதை கேட்டு நான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்று வழி கேட்டு முதலில் நான் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

தாவா சொத்தில் உள்ள வழியை நானும், கெம்பகவுண்டரும் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், தாவா சொத்தில் எவ்வித வழியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் நான் ஜக்குபந்தி குறிப்பிட்டு சொத்து விவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆ அட்டவணையில் 25 அடி நீளம், 3 1/2 அடி அகலம் என்று குறிப்பிடப்பட்டு இருப்பதற்கும் ஜக்குபந்தி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி நீள அகலத்தை எதன் அடிப்படையில் வழக்குரையில் குறிப்பிட்டேன் என்று சொன்னால் குத்துமதிப்பாக சொன்னேன்.

சர்வே எண்கள், 1160/4, 1160/5 ஆகிய நிலங்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் ஒரு சர்வே எண் கெம்பகவுண்டருக்கும், மற்றோரு சர்வேஎண் எனக்கும் பாத்தியப்பட்டது. தற்போது இரண்டும் எனது பாத்தியத்தில் உள்ளது. ஆ அட்டவணை சொத்துக்கான அளவுகள் மற்றும் நீளம், ஆகியவை வழக்கிற்காக

பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் பிரதிவாதி வீடு கட்டி உள்ளார். அதை ஒட்டி அவரது தகப்பானாருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. அதில் வீடு உள்ளது. அந்த சர்வே எண்.1160/5 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சர்வேஎண்.1160/4 1ம் பிரதிவாதியின் தகப்பானாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கும், அவரது தகப்பானாருக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் தனித்தனியாக வீடுகள் உள்ளது. இரண்டு சர்வே எண்களிலும் வீடுகள் உள்ளதால் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் வழிப்பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்தில் வழிப்பாதை இல்லை என்றும், சிமெண்ட் சாலையில்இருந்து எனது சொத்திற்கு வருவதற்கு பிரதிவாதிகளின் நிலத்தில் வழி கேட்டு பிரச்சனை செய்ததால் பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.97/2017 வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் வழிக்கொடுக்காததால் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சரியான அளவுகளுடன் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பட்டவே கிடையாது. எனது சொத்துக்கு செல்வதற்காக வழி கேட்கிறேன். என்னுடைய பட்டாவில் இருக்கும் வழியை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் பாதை கேட்கிறேன். பி.சா.ஆ-3 பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டு உள்ளது என்று நான் படித்து பார்க்கவில்லை. படித்து சொன்னார்கள். மேற்படி ஆவணம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் செல்வம் எனக்கு வழிக்காக மேற்படி பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார். மேற்படி பத்திரத்தை பற்றி வழக்கு தாக்கல் செய்யும்போது சொல்லவில்லை. செல்வம் தாக்கல் செய்துள்ள வழக்கில் பதில் தாக்கல் செய்யும்போது மேற்படி ஆவணத்தை பற்றி நான் சொல்லவில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது அந்த பத்திரம் கிடைக்காத காரணத்தால் நான் சொல்லவில்லை.

மேற்படி பத்திரத்தை பொறுத்து வழக்கில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. மேற்படி ஆவணம் TN EB மத்தூர் என வாங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள ஐக்குபந்தி

விவரம், நீள, அகலம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணமே ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக என்னால் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணம் செல்லாது என்றும், அதன் அடிப்படையில் எவ்வித உரிமையும் எனக்கு ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ-3 ஆவணத்தை கொண்டு தனியாக தான் நான் வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றும், இந்த வழக்கில் எவ்வித உரிமையும் மேற்படி ஆவணத்தை கொண்டு கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நிலத்தை அளப்பதற்காக நீதிமன்ற ஆணையர் கேட்டு மனு தாக்கல் செய்தேன்.

பிரதிவாதியின் தகப்பனார் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட இடத்திலும், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திலும், வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள். அந்த பிரதிவாதியின் இடத்தை அபகரிப்பதற்காக வேண்டி பொய்யாக வழி இருப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையாகவே பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றும், கடக்கால் போட்டு சுற்று சுவர் அமைக்க முற்பட்டபோது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சுற்றுசுவர் கட்டுவதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்தார்கள். சர்வே எண்.1160/4 ல் எவ்வித வழித்தடமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணில் பிரதிவாதி வீடு கட்டி ஆதியில் இருந்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.எனவே வழக்கானது பிரதிவாதிகளின் செலவு தொகையொடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.
ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.